நான் சந்தேகப்படுகிறேன். அங்குள்ள அரிசன மக்கள் அவ்விடத்திற்குப் போகமாட்டேன் என்று தெரிவிப்பார்களானால் அதன்பிறகு, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

* 163 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the allottees of house-sites in Palayanur colony in Tiruttani taluk are not able to construct houses thereon since the sub-division work has not been completed so far; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 10—10—1972-ல் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன. நிலத்தை உட்பிரிவு செய்து அவரவர்களுக்கு உரிய மனையின் எல்லையைக் குறித்துக் காண்பிக்கும் வேலையும் 26—6—1973-ல் முடிவடைந்து விட்டது.

திருவண்ணாமலை வட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 164 **வினா—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை வட்டம், மதுராம்பட்டு, கண்டியங்குப்பம், நரியாம்பட்டு அரிசன மக்கள் வீட்டு மனைப்பட்டாக் கோரி விடுத்துள்ள மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மதுராம்பட்டு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

கண்டியாங்குப்பம்.—நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6-ன் கீழ் வடாற்காடு மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

நரியம்பட்டு.—நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடியும் நிலையில் உள்ளன.